**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

# நீதிநூல்களில் - புருஷார்த்தங்கள்

(சங்கேந்தி ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.எஸ்.வேங்கடேசபட்டாச்சாரியார்,
பெருமாள் ஸன்னிதி அர்ச்சகம்)

வந்தே ஸ்ரீநயனோத்பலஸ்ய சசினம் சேஷாசலாதீச்வரம்
ப்ரம்மாத்யர்ச்சித பாதபத்மயுகளம் லோகைக நேத்ரோத்பவம்
வாஸிஷ்டை: ஸனகாதிபிர் முனிகனை: ஸம்ஸ்தூயமானம் ஸதா
பக்தானாமகிலார்த்த தாயினமகம் ஸ்ரீவேங்கடேசம் குரும்

நம் இந்தியத் திருநாடு மேலை நாடுகளைக் காட்டிலும் தலை சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரணம் நம்முடைய ஒழுக்கமேயாகும். நமது முன்னோர்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் நீதிக் கருத்துகளை அறம்-பொருள்-இன்பம் என்ற முப்பாலாகத் தந்தனர். நம் நாட்டில் எழுந்துள்ள எந்தக் கதையைப் பார்த்தாலும் அது ஏதேனும் ஒரு நீதியைப் போதிப்பதாகவே இருக்கும் என்பதாக சர்வில்யம் ஜோன்ஸ் என்பார் கூறுவார். இவை உரை நடை, பாட்டு (ஸ்லோகம்) இரண்டும் சேர்ந்தது என மூன்று வகையில் இருந்தாலும் , அதிகமாக ஸ்லோக வடிவில் காணக்கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக அறத்தை போதிக்கக் கூடிய செய்திகளை ரிக்வேதத்திலும், உபநிடதங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும், இலக்கியங்களிலும் காண முடிகின்றது.

ரிக்வேதத்தில் முதலாவது மண்டலத்தில் அறத்தைப் பற்றி பேசப்பட்டுள்ளது. வேதாந்தம் என்று சொல்லக்கூடிய வேதத்தின் பிற்பகுதியில் (அதாவது - ‘தைத்தரீயோபநிஷத்தில்) ‘மாத்ரு தேவோ பவ‘ - ‘பித்ருதேவோ பவ‘, ஆசார்ய தேவோ பவ‘, ‘அதிதி தேவோ பவ‘ தர்மம் சர‘ போன்ற வாக்கியங்களின் மூலம் ‘தாயைத் தெய்வமாகக் கொண்டிரு‘ ‘தகப்பனாரைத் தெய்வமாகக் கொண்டிரு‘ ‘குருவைத் தெய்வமாகக் கொண்டிரு‘ ‘விருந்தினரைத் தெய்வமாக் கொண்டிரு‘ ‘தர்மத்தைச் செய்‘ என்பதாக நாம் அனைவரும் அறவழியில் செல்ல போதிக்கின்றது.

‘இடியானது டடட என்று இடிக்கிறது.‘ என இயற்கைச் செய்தியைச் சொல்வது போல் துவங்கி அதற்கான பொருளை.... முதல் ‘ட‘ என்பதற்கு ‘தாம்யத‘ அடங்கு என்றும், இரண்டாவது ‘ட‘ என்பதற்கு ‘தத்த‘ கொடு என்றும் மூன்றாவது ‘ட‘ என்பதற்கு தயத்வம்‘ அருள் செய் என்றும் கூறி அறத்தை நமக்கு போதிக்கிறது தர்ம சாஸ்த்ரம்.

வேதவேதாந்தங்களுக்கு அடுத்த நிலையிலுள்ளது ஆதிகவியான ஸ்ரீமத் வால்மீகியால் இயற்றப் பெற்றதும், ஸுப்ரஸித்தமானதும், மஹாகாவ்யமுமான ஸ்ரீமத்ராமாயணம். இந்த காவ்யத்தில் யுத்த காண்டம் 91 ஆவது ஸர்க்கத்தில் ‘லக்ஷ்மணனுக்கும் இந்த்ரஜித்துக்கும் கடுமையாக சண்டை நடக்கிறது. இருவரும் ஒருவருக்கொருவர் பலவிதமான பாணங்களை எய்துகிறார்கள். இறுதியாக லக்ஷ்மணன்...... ‘தர்மாத்மா ஸத்யஸந்தச்ச ராமோ தாசரதிர்யதி - பௌருஷேசாப்ரதி த்வந்த்வ: சரைணம் ஜஹி

ராவணிம்‘ (அதாவது) ஒப்பற்றவராகிய தசரத சக்கரவர்த்தியின் மைந்தராகிய ஸ்ரீராமன் தர்மாத்வாகவும், ஸத்யஸந்தராகவும் இருக்கிறார் என்றால், ஓ! பாணமே இந்த இந்த்ரஜித்தை வதைப்பாயாக! என்று கூறி பாணத்தை எய்தவுடன் அது இந்த்ரஜித்தை அழித்தது என்று கூறுவதன் மூலம் நாம் தர்மத்தையும், ஸத்யத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்பதை ஆதிகவி எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது எனலாம்.

மஹாபாரதத்தில் அனுசாசனபர்வம், சாந்திபர்வம் யக்ஷப்ரச்னம் விதுரநீதி போன்றவை நீதியை எடுத்துரைக்கும் இடங்களாக காணப்படுகிறது. இவ்வாறு அறத்தை எடுத்துரைக்கக்கூடிய நூல்களை கண்டகாவியம் என்பர். இவைகளுக்கு மஹாகாவ்யங்களுக்கு சொல்லப்பெற்றுள்ளது போன்ற இலக்கண வரையறை கிடையாது. கண்டகாவ்யத்தைப் பொருத்தவரை ஒரு நூலுக்கு ஒரே கவியாக வேண்டுமானாலும் இருக்கலாம், பலகவிகள் எழுதிய தொகுப்பு நூலாகவும் இருக்கலாம். விருத்தங்களும் மாறி மாறி அமைந்திருக்கலாம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறுவர். இவற்றில் முக்கியமாகக் கூறப்படுவது தர்மம், அர்த்தம், காமம் அதாவது அறம் பொருள் இன்பம் என்ற மூன்றுமாகும். இவற்றை அறிந்து செயல்படக்கூடிய ஒரு ஒப்பற்ற பிறவி மானிடப்பிறவி ஆகும்.

‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது‘ என்பதைப் போன்று மானிடப்பிறவி பெற்ற நாம் கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட ‘விவேகம்‘ என்ற பகுத்தறிவை கல்வி, கேள்விகளால் அவசியம் பயன்படுமாறு செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாம் எடுத்த இப்பிறவி பயனடையும். பிறவிப்பயனறியாது பசுபக்ஷிகளைப் போன்று அவிவேகிகளாக இருந்துகொண்டு உண்ணுவதும் உறங்குவதுமாகக் காலத்தைக் கழித்து நமது வாழ் நாட்களை வீணாக்கி பிறவிப்பயனை பாழாக்கிவிடுவோம் என்கிறார் தாயுமானவர்.

எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்‘, இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எது வருமோ அறிகிலேன், மெய்க்ஞான சுகநிஷ்டை சேராமலே ‘சோற்றுத்துருத்தியை சதமெனவும் உண்டுண்டு தூங்க வைத்தவர் யார் கொலோ‘ - என்ற வரிகளால் சுட்டுவார். இப்பிறவியில் மெய்யுணர்வினை அறிந்து கொள்வதற்குக் காரணமான இந்த உடலைத் தந்த கடவுளிடம் நன்றியுடன் நம் உள்ளிருக்கும் ஆத்மாவைக் காணும் முயற்சியில் ஈடுபடவேண்டும். ஆத்மாவின் நன்மையைத் தேடுகிறவனும், தேடாதவனும் முறையே தனக்குத்தானே நண்பர்களாகவும் எதிரிகளாகவும் இருக்கிறான் என பகவத்கீதை உபதேசிக்கிறது.

## தர்மம் (அறம்)

நமது ஆத்மாவை தாழவிடாமல் தாங்கிக் கொண்டிருப்பது எதுவோ அதுவே தர்மம் எனப்படுகிறது. தர்மம் என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு தாங்கிக்கொண்டிருக்கிறது என்று பொருள். அது மனம் வாக்கு காயம் (சரீரம்) என்ற மூன்று ஸாதனங்களிலும் தூய்மை பெற்றிருக்கும் நிலையில் ஸித்தி பெறத்தக்கதாகும். வாக்கு சரீரம் ஆகிய இரண்டிலும் ஒருவன் சுத்தனாக இருக்க வேண்டுமானால் அவன் முதல் மனதை

சுத்தமாக வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சியில் தேர்ச்சி பெற்றவன் தான் தர்மத்தில் ஸித்திபெற்றவனாவான். மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து என்று திருவள்ளுவர் கூறுவார். மனதிலுள்ள தீய எண்ணங்களை நீக்கி நல்ல எண்ணங்களைக் கடைபிடித்து அதன்வழி செல்கின்றவனின் செயல்கள் அனைத்தும் பிறருக்கும் தனக்கும் நன்மையைச் செய்கின்றனவாகவே இருக்கும். அவனே அனைத்திலும் மகிழ்ச்சியை அடைகிறான். இதை ஒளவையார் -

வாய்மையாற்பொய்யா மனத்தினான் மாசற்ற
தூய்மையானீசனருள் - என்று கூறுவார்.

அறம் என்பது எவன் மற்றவர்களை நிந்திக்காமலும், கோள், பொய், பிறர்துன்புறும் பேச்சு இவற்றைச் சொல்லாமலும், பிறரின் தாரம், தனம் ஆகியவற்றில் ஆசைப்படாமலும் மற்றவரைத் துன்புறுத்தாமலும் இருந்துகொண்டு காமம், க்ரோதம், லோபம், மதம், மாத்சர்யம் ஆகிய ஆறு உட்பகைவர்களால் கெடுக்கப்படாத மனதுடையவனும் தன்னையும் தன்புத்திரனையும் போன்று அனைத்து பிராணிகளையும் நினைத்து அவைகளுக்கு நன்மையைச் செய்கிறவனும் தனக்குரிய தர்மங்களை செய்பவனாக கருதப்படுகிறான். இதை ஒளவையார் - ஈசனைக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீ நினைத்துக்கொள் என்பார்.

மனம் தெளிவாக இருத்தல், நல்ல எண்ணங்களுடன் கூடியிருத்தல், பல இடங்களுக்குச் செல்லாமல் அடங்கி இருத்தல் பிறருடன் பேசும்போது கபடம் இல்லாமல் இருத்தல் ஆகியவைகள் மனதின் உத்தமமான தர்மமாகும். மற்றவர்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணாமல் ப்ரியமானதும் நன்மையானதும் உண்மையானதுமான வார்த்தையைப் பேசுவதும், வேத சாஸ்த்ரங்களை அப்யாஸம் செய்வதும், மந்த்ரங்களை ஜபித்தல் போன்ற அனைத்தும் வாக்கின் உத்தமமான தர்மமாகும். ஆத்ம ஞானிகள் குருவானவர்கள் உயர்ந்த தேவர்கள் போன்றவர்களை பூஜிப்பதும் கெட்ட பழக்கங்களை மேற்கொள்ளாமல் இருப்பதும் மற்றவர்களை தொந்தரவு செய்யாமருப்பதும் மற்றவர்களுக்கு உதவி செய்வதும் சுத்தமாக இருப்பதும் நம் உடன் உத்தமமான தர்மம் அறம் என்பதாக பகவத்கீதை எடுத்தியம்புகிறது.

பிறர் எதை நினைப்பதனாலும் எதைச் சொல்வதனாலும், செய்வதனாலும் நமக்கு சந்தோஷம் உண்டாகிறதோ அதையே நாம் பிறர்பொருட்டு நினைத்தலும் சொல்லுதலும் செய்தலும் வேண்டும். இதுவே அறமாகும். பிறர் எதை நினைப்பதனாலும் சொல்வதனாலும், செய்வதாலும் நமக்கு வருத்தம் உண்டாகிறதோ அதை நாம் பிறருக்குச் செய்யக்கூடாது. உனக்குப்பிறர் எதைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறாயோ அதையே நீ பிறருக்குச் செய்ய வேண்டும். இவ்வாறு அனைத்திலும் உள்ள தர்மத்தை உள்ளபடி உணர்ந்து அதன்படி நடப்பவர்களுக்கு நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷம் (பிறவாநிலை) நிச்சயம் கிடைக்கும்.

மாசற்ற கொள்கை மனத்திலடைந்தக்கால் ஈசனைக் காட்டும் - என்பது ஒளவை வாக்கு.

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

## பொருள் (அர்த்தம்)

அர்த்தம் என்ற ஸம்ஸ்க்ருத சொல்லுக்கு கல்வி, செல்வம், பத்னி, மக்கட்பேறு, நண்பன் அமைதல் ஆகியவற்றின் நிறைவு என்பதாகச் சான்றோர் கூறுவர். இவை அனைத்தும் நல்ல வழியில் கிடைத்தால் தர்மத்திற்கும், காமத்திற்கும் ஸாதகமாக இருந்து ஜன்ம ப்ரயோஜனத்தைச் செய்வதாகும். இல்லாவிடில் கெடுதலாக அமையும்.

அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து
நீதின்றி வந்த பொருள் - திருவள்ளுவர்

## இன்பம் (காமம்)

காமம் என்ற ஸம்ஸ்க்ருத சொல்லுக்கு பிராணிகளால் மிகப்பிரியமாய் விரும்பப்படுவது என்பது பொருளாகும். அது நிலையில்லாத அநித்ய சுகமாகிய அனந்த ரூபமான பலன். எனவே அது சிற்றின்பம் எனப்படும். இவை ஐஹிகம், ஆமுஷ்மிகம் என இருவகைப்படும். புஷ்பம், சந்தனம் முதய சுகபோகங்களின் அனுபவத்தால் உண்டாகும் சுகம் ஐஹிக சுகமாகும். ஸ்வர்கலோகத்தில் விஷய போகத்தில் உண்டாகும் சுகம் ஆமுஷ்மிகமாகும். இவை இரண்டையும் கருப்பொருளாக வைத்து பல நீதி நூல்கள் எழுந்தன. இவற்றுள் பழமையாகக் கூறப்படுவது சாணக்கியரால் எழுதப்பட்ட அர்த்த சாஸ்த்ரம் எனும் நூல் ஆகும். அதனைத் தொடர்ந்து பர்த்ருஹரி எழுதிய நீதிசதகமும் வைராக்யசதகமும் ஆகும். இதனுடைய தொடர்ச்சியாக சுந்தரபாண்டியர் எழுதிய த்விசஷ்டிகா எனும் நூலும் அதன் பின்னர் நீதிரத்னம், நீதிசாரம், நீதிப்ரதீபம் போன்ற பழமைவாய்த நூல்களும் உள்ளன. அடுத்தநூற்றாண்டில் க்ஷேமேந்த்ரரின் சாருசர்யா, ஜல்ஹனரின் முக்தோபதேசம், வேதாந்ததேசிகரின் சுபாஷிதநீவி, நீலகண்டரின் ஸபாரஞ்சன சதகம், சாந்திவிலாசம், கவிடம்பனம் போன்ற நூல்களைக் குறிப்பிடலாம்.

இதேபோல் தமிழ் மொழியில் பெரும்பாலும் பல நீதிநூல்கள் உள்ளன. சமய நூல்களாகிய புராணங்களும் சமய நீதிகளை வயுறுத்தவே எழுதப்பெற்றது. ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம் - அல்லவை செய்வார்க்கறங் கூற்றம், பத்தினிப் பெண்டிரை யாவரும் போற்றுவர், ஊழ்வினை உறுத்து வந்தூட்டும் என்னும் மூன்று நீதிகளையும் வற்புறுத்துகிறது. மணிமேகலை துறவறத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது. சீவகசிந்தாமணி- ஊழ்வினை உறுத்து வந்தூட்டும் - என்பதை எடுத்துக்காட்டுகிறது. இவை அனைத்தும் காவியச் சுவையோடு அறத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. ஐஞ்சிறுங்காப்பியங்களும் - அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கள் - கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக- ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானங்காப்பேதையிற் பேதையாரில் - என்பன போன்ற கருத்துக்கள் கல்விகற்பதே நீதிவழி ஒழுகுதற்கென்னும் கருத்தை வயுறுத்துகின்றன.

நீதியை மட்டும் வயுறுத்த எழுந்த நீதி நூல்களில் தலையாயது திருக்குறள் ஆகும். இது இல்லறம் துறவறம் என இரு நெறியினும் பொதுவாக மக்கள் நடந்து கொள்ளும் முறையைக் கூறுவதோடு அரசியல் நெறியையும் விளக்கமாகக் கூறுகிறது. அறம்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

பொருள் இன்பம் எனும் மூன்றுபிரிவாக இருப்பதால் முப்பால் எனும் பெயரையும் உடையது. இதற்கு அடுத்த நிலையில் உள்ளது நானூறு எனும் தொகுப்பு நூல் ஆகும். இது திருக்குறளைப் பின்பற்றியே முப்பாலாகப் பிரிக்கப்பெற்றது. திருக்குறளோடு இதையும் சேர்த்து - நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி- என்று பாராட்டப்பெற்றது. நாலடியார் போன்றே நான்கடி வெண்பாக்களால் பழமொழிகளின் பொருள்களை உள்ளடக்கி -பழமொழி நானூறு- எனும் பெயரால் முன்னுரையனார் என்பவரால் ஒரு நூல் செய்யப்பட்டது.

ஸம்ஸ்க்ருத நூல்களிலுள்ள ஆசாரங்களைத் தொகுத்து பெருமாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவையும், ஒவ்வொரு செய்யுளிலும் மூன்று நீதிகளைக் கூறுமாறு நல்லாதனார் இயற்றிய திரிகடுகமும், நான்கு நீதிகளை ஒவ்வொரு செய்யுளிலும் கூறுமாறு விளம்பிய நாகனார் யாத்த நான்மணிக்கடிகையும், ஐந்து நீதிகளை ஒவ்வொருபாடல் மூலமாகவும் எடுத்துக்கூறுவதுபோன்று காரியாசான் இயற்றிய -சிறுபஞ்சமூலமும்- கணிமேதையார் இயற்றிய ஏலாதியும், கூடலூர் கிழார் இயற்றிய முதுமொழிக் காஞ்சியும் பூதஞ்சேதனார் இயற்றிய இனியவை நாற்பதும் கபிலர் இயற்றிய இன்னா நாற்பதும் போன்ற நூல்கள் தமிழ் இலக்கியத்தின் நீதி நூல்களாகும்.

18ம் நூற்றாண்டில் பல நீதிநூல்கள் தோன்றின. இருப்பினும் வேதகிரி முதயாரால் எழுதிய மனுநீதிசதகமும், நீதி சிந்தாமணி ஆகியவை மட்டும் முக்கியமாகக் கருதப்படுகிறது.

19ம் நூற்றாண்டில் தாண்டவராய முதயார் மராட்டி மொழியிருந்து பஞ்சதந்திரம் எனும் நூலை தமிழில் மொழிபெயர்த்தார். இது அரச நீதியை போதிப்பதாகும். இதே நூற்றாண்டில் வேதநாயகம்பிள்ளை பெண்மதிமாலை எனும் நூலை எழுதியிருக்கிறார், முத்துராமங்கசேதுபதி அவர்கள் நீதிபோதம் எனும் நூலை இயற்றியுள்ளார்.

இவ்வாறு சங்ககாலம் தொடங்கி தற்சமயம் வரை எழுந்துள்ள நீதிநூல்கள் பற்பல உள்ளன. இவைகள் இன்றைய இளைய தலைமுறையினருக்கு யாராலும் போதிக்கப்படவில்லை. அதாவது அக்காலத்தில் பெரியோர்கள் தங்களது பேரன் பேத்திகளுக்கும் அருகிலுள்ள குழந்தைகளுக்கும் நீதி நூல்களில் காணப்படும் செய்யுட்களைக் கூறி அதிருக்கும் கதையையும் கூறி நீதியை விளக்கி பொருளையும் சொல்க்கொடுத்தனர். அதனால் குழந்தைகளின் மனதில் நீதிகள் பசுமரத்தாணிபோல் பதிந்தது. அவர்கள் தவறுகள் செய்யாமல் வளர்ந்து நல்ல ஸமுதாயத்தை உருவாக்கினர்.

இக்கட்டுரையை படித்தபிறகு ஏதேனும் ஒருவர் பழமையைத் தொடர்ந்து நல்ல ஸமூகம் தோன்ற வழிவகுத்தால் அதுவே நமது சான்றோர்களுக்குச் செய்யும் நிறைவான தொண்டாகவும் இக்கட்டுரையின் பலனாகவும் கருதுகிறேன். இந்த பொதுவான விஷயத்தை எழுதுவதற்கு என்னை ஊக்குவித்து இக்கட்டுரையை புஸ்தகத்தில் வெளியிட்ட நடார் மஹானின் சதமான மஹோத்ஸவ கமிட்டிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *